S.C. 323 /2017

P.W. 6 **திரு. சதீஸ்கண்ணன்** **15 .07.2019**

**எதிரிகள் தரப்பில் கு. விசாரணை:**

சம்பவத்தின் போது 2வது எதிரி சுருதி என்ற பெண்ணை காதல் திருமணம் செய்து தனியாக ஜெயந்திபுரத்தில் வாழ்ந்து வந்தார் என்றால் சரிதான். திருமணத்தில் நாங்களும் என் வீட்டார்களும் விருப்பம் இல்லாமல் இருந்தோம் என்றால் சரிதான். அதனால் என் அண்ணனிடம் பேச்சு வார்த்தை இல்லாமல் இருந்தோம். என் அப்பா சம்பவ காலத்தில் உயிருடன் இல்லை. என் அப்பா தற்கொலை செய்து இறந்துவிட்டார். என் அப்பா ஏன் எப்படி இறந்தார் என்ற விவரத்தை போலிசாரிடம் கூறவில்லை. என் அப்பா இறந்தது எப்படி என்பது தெரிந்தால் இந்த வழக்கிற்கு விரோதமானது என்பதால் நான் என் அப்பா இறந்த விவரத்தை கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் என் அண்ணன் பேசிய போது அவர் குடித்துவிட்டு நிதானமில்லாமல் இருந்தார் என்றால் சரிதான். அதனால் தான் அன்றைய தினம் என் அண்ணன் பேச்சை நான் உலறுவதாக நினைத்தேன். என் வீட்டிற்கு ஒரு சாவிதான் உள்ளது. நான் காலையில் வேலைக்கு சென்றால் மதியம் சாப்பிட வீட்டிற்கு வருவேன். என் அம்மா மதியம் எனக்கு உணவு சாப்பாடு செய்து வைத்திருப்பார் நானும் எனது அம்மாவும்தான் சேர்ந்து சாப்பிடுவோம். நான் சம்பவத்தன்று என் வீட்டிற்கு போனபோது என் அம்மா வீட்டிலிருந்தார். என் அம்மா சாவி கேட்ட போது நான் சாவி இல்லையென்று சொன்னேன் என்றால் சரிதான். நான் வீட்டிற்கு போகும் போது போலிசாரும் ஊர்க்காரரும் வந்திருந்தார்கள். போலிசார் என்னையும் என் அம்மாவையும் விசாரிப்பதற்காக காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார். எங்கள் வீடு என் தந்தையார் பெயரில் உள்ளது. என் தந்தையார் இறந்த பிறகு அந்த வீடு என் அண்ணனுக்கும் பங்கு உண்டு என்றால் சரிதான். நான் போலிசாரிடம் நீதிபதியிடம் சென்று வாக்குமூலம் கொடுக்க தயாராக இருக்கிறேன் என்று சொல்லவில்லை. போலிசார் சொன்னதன் பேரில் நான் நீதித்துறை நடுவரிடம் சென்று வாக்குமூலம் அளித்தேன். என் வீட்டிற்கும் ஆணையூரில் உள்ள தமிழ்நகருக்கும் இடையே சுமார் அரை கி.மீ தூரமிருக்கும். என் வீட்டிலிருந்து கிழக்கே 4, 5 தெரு தள்ளிதான் தமிழ்நகர் இருக்கிறது. எனது வீட்டிற்கு அருகில் பிள்ளையார் கோவில் ஏதுமில்லை. நான் சம்பவத்தன்று மதியம் லீவு போட்டிருந்தால் அது குறித்து எங்கள் அலுவலக வருகை பதிவேட்டில் இருக்கும் என்றால் சரிதான். போலிசார் என் அலுவலகத்திற்கு வந்து பணியிலிருப்போர்களையோ நான் பணிக்கு சென்றதற்காக ஆவணங்களையோ

கைப்பற்றவில்லை. இந்த வழக்கில் என்னையும் என் தாயாரையும் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக என் சகோதரர் மீதுள்ள விரோதத்தை காரணமாக கொண்டு போலிசார் சொல்லிக்கொடுத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.